RNI No: TNTAM/2023/88599

திரை மொழி
THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

திரை: 03	மொழி : 9	ஏப்ரல் - 2026	பக்கம்: 8	விலை: ரூ.10
Volume : 03	Issue : 9	April - 2026	Page: 8	Price: Rs. 10



ஜனநாயகன்: அறிவுசார் சொத்துரிமை

இந்தியத் திரையுலக வரலாற்றில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திரைப் படங்களில் ஒன்றாக கே.வி.என் புரொடக்ஷன்ஸ் (KVN Productions) தயாரிப்பில், இயக்குநர் எச். வினோத் இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' திரைப்படம் உருவானது. சுமார் ₹300 கோடி முதல் ₹500 கோடி வரையிலான பிரம்மாண்ட மான பொருட்செலவில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்தில், விஜய்யுடன் இணைந்து பூஜா ஹெக்டே, பாபி தியோல், மமிதா பைஜு, கௌதம் வாசுதேவ் மேனன், பிரகாஷ் ராஜ், நரேன் மற்றும் பிரியாமணி உள்ளிட்ட பெரும் நட்சத்திரப் பட்டாளமே நடித்துள்ளது. அனிருத் ரவிச்சந்தரின் இசையமைப் பிலும், சத்யன் சூரியனின் ஒளிப் பதிவிலும் இப்படம் தொழில்நுட்ப ரீதியாக மிக உயர்ந்த தரத்தில் உருவாக்கப் பட்டது.

"கசிந்த காட்சிகளைப் பார்ப்பதும் பகிர்வதும் திருட்டுக்குச் சமம்; இதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை"

ஓர் அலசல்

இத்திரைப்படம் 2026ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதியன்று பொங்கல் பண்டிகையை முன்னிட்டு உலகமெங்கும் வெளியாவ தாகத் திட்டமிடப்பட்டி ருந்தது. எனினும், திரைப் படத் தணிக்கைக் குழுவின் (CBFC) சான்றிதழ் வழங்கும் நடைமுறைகளில் ஏற்பட்ட தொடர் தாமதங்கள் காரணமாகப் படத்தின் வெளியீடு தள்ளி வைக்கப் பட்டது. இதன் நீட்சியாக, 2026 ஏப்ரல் 9 ஆம் தேதியன்று ஒட்டுமொத்தத் திரைப் படமும் உயர் தரத்தில் (HD Quality) இணையத்தில் சட்டவிரோதமாகக் கசிந்து திரையுலகில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.



தணிக்கைச் சிக்கல்களும் அமைப்பியல் ரீதியான காலதாமதங்களும்

'ஜனநாயகன்' திரைப் படத்தின் வெளியீட்டுத் தாமதத்திற்கு மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவின் (CBFC) நடை முறைகளே முக்கியக் காரணமாக அமைந்தன. தணிக்கைக் குழு பரிந்துரைத்த திருத்தங்களை படக்குழுவினர் செய்த பிறகும்,

> பக்கம் 7ல் தொடரும்



சினிமாவில் செயற்கை நுண்ணறிவு! வரமா? சாபமா?

ராஜ்மோகன் சுப்ரமண்யன்



இலக்கிய பேராசான் சுந்தர ராமசாமி யின் சிறுகதை ஒன்றை மிக சுருக்கமாக சொல்லி முடித்து கொள்ளவிரும்புகிறேன். ஒரு துணிக்கடை. அதில் நீண்ட அனுபவமிக்க ஒரு கணக்குப்பிள்ளை. எந்த கணக்கையும் துல்லியமாக போடுவார். அவர் இல்லையேல் கடையே இல்லை என்ற நினைப்பு. ஒருநாள் கடை உரிமையாளரின் பேரன் ஒரு கால்குலேட்டர் வாங்கி வருவான். அது வந்தபின்னர் கணக்குபிள்ளை தனக்கான உரிமைகள் பறிபோனதாக நினைத்து நோய்வாய்ப்படுவார். மிகவும் மோசமான உடல்நிலைக்கு செல்வார். எந்த சிகிச்சையும் பலனளிக்காத நிலையில் ஒருநாள் அந்த கால்குலேட்டர் பழுதாகிவிடும். அப்பொழுது முதலாளி கூப்பிடுடா அந்த கணக்குபிள்ளையை என்பார். இப்பொழுது உடல்நலமில்லாத கணக்குப்பிள்ளை இந்த வார்த்தையை கேட்டவுடன் துள்ளிகுதித்து ஓடிவருவார். இந்த கதைக்கும் கட்டுரைக்கும் என்ன சம்மந்தம் ? நீங்களே கண்டுபிடியுங்கள்

AI தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் இந்த காலத்தில், திரைப்படத் துறை பெரும் மாற்றங்களை சந்தித்து வருகிறது. குறிப்பாக, Indie Film makers (சுயாதீன திரைப்பட இயக்குநர்கள்) இந்த மாற்றத்தால் அச்சமும், அதே சமயம் புதிய வாய்ப்புகளும் அனுபவித்து வருகின்றனர். AI ஒரு அச்சுறுத்தலாக அல்லாமல், ஒரு சக்திவாய்ந்த கருவியாக பயன்படுத்தப்படும் போது, அது Indie Filmmakersக்கு மிகப் பெரிய ஆதரவாக மாறுகிறது.

முதலில், AI ஒரு இயக்குநராக செயல்படக் கூடாது என்பது முக்கியமான புரிதல். ஒரு திரைப்படத்தின் உள்ளார்ந்த உணர்ச்சி, மனித அனுபவம் மற்றும் கலைநயம் போன்றவை மனிதர்களால் மட்டுமே உருவாக்கப்பட முடியும். AI இவை அனைத்தையும் மாற்ற முடியாது. எனவே, AIஐ ஒரு உதவியாளராக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அது வேலைச்சுமையை குறைக்கும் ஒரு கருவியாக இருக்க வேண்டும், மாற்றாக சிந்தனைக்கு பதிலாக இருக்கக்கூடாது.

AIயின் மிகப்பெரிய பலம் அதன் வேகம் மற்றும் செயல்திறன். Script formatting, editing, scheduling போன்ற நேரம் பிடிக்கும் பணிகளை AI மூலம் வேகமாக முடிக்க முடியும். இதனால் இயக்குநர்கள் தங்கள் கவனத்தை படைப்பாற்றலின் மேல் செலுத்த முடியும். மேலும், குறைந்த செலவில் உயர்ந்த தரமான visuals உருவாக்கும் திறனும் AIக்கு உள்ளது. இது குறைந்த பட்ஜெட்டில் வேலை செய்யும் Indie Filmmakersக்கு ஒரு பெரிய ஆதாயமாகும்.

அதே சமயம், AIஐ பயன்படுத்தும் போது ஒரு சமநிலை அவசியம். அதிகமாக AI மீது சார்ந்துவிட்டால், இயக்குநரின் தனித்துவமான குரலும் பாணியும் மங்கிவிடும் அபாயம் உள்ளது. ஒரு திரைப்படத்தின் அடையாளம் அதன் originalityயில் தான் உள்ளது. அதனால், AI உதவியுடன் வேலை செய்வதோடு, அதன் கட்டுப்பாட்டை முழுமையாக filmmaker கையில் வைத்திருக்க வேண்டும்.

AI data analysis இலும் முக்கிய பங்கு வகிக்கிறது. பார்வையாளர்களின் விருப்பங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை பகுப்பாய்வு செய்து, ஒரு திரைப்படத்தின் marketing மற்றும் release strategyஐ மேம்படுத்த முடியும். இதனால், Indie Filmmakers கூட பெரிய தயாரிப்புகளுடன் போட்டியிடும் நிலைக்கு வர முடிகிறது.

> **AI ஒரு tool மட்டுமே; அது இயக்குநரை replace செய்யக்கூடாது. AI ஒரு அச்சுறுத்தல் அல்ல; அது ஒரு வாய்ப்பு**

முக்கியமாக, AI இந்த துறையில் "level playing field" ஒன்றை உருவாக்குகிறது. முன்னதாக அதிக பட்ஜெட் மற்றும் பெரிய தொழில்நுட்ப வசதிகள் இருந்தவர் களுக்கு மட்டுமே கிடைத்த வாய்ப்புகள், இப்போது அனைவருக்கும் திறந்துவிப் பட்டுள்ளது. இதன் மூலம் திறமையுள்ள புதிய கலைஞர்கள் தங்கள் குரலை உலகளவில் வெளிப்படுத்தும் வாய்ப்பு பெறு கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை யில் செயற்கை நுண்ணறிவு கூறித்து ஒரு கூட்டம் நிகழ்ந்தது. அதில் பலபடைப்பாளிகள்கலந்துகொண்டனர். முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனம் நடத்தும் மிகப்பெரிய தொழிலதிபரும் கலந்து கொண்டார். அவர் பண பலமும் செல்வாக் கும் பிரபலமான முகமும் கொண்டவர். பலகோடி கொட்டும் தொழில்நுட்ப நிறுவனம் வேறு நடத்துகிறார். எனவே அவர் ஏஐ (செயற்கை நுண்ணறிவு) பற்றி என்ன பேசப்போகிறார் என்று ஆவலுடன் காத்துகொண்டிருந்தனர். எனக்கு ஆச்சர்யம் இல்லை. பன்னாட்டு நிறுவனப்பணியாளரான நான் ஒரு தொழில்நுட்ப வல்லுனர் என்ன பேசப் போகிறார் என்று கணித்திருந்தேன். நிச்சயம் ஏஐ பற்றி பேசி பீதியை கிளப்புவார் என்று எப்படி நினைத்தேனோ அதையே துல்லியமாக பேசினார். வந்திருந்த படைப்பாளிகள் அனைவரும் புலமப்பத் தொடங்கி விட்டனர். ஏற்கனவே பதிப்பக தொழில் முதல் எல்லா தொழில்களும் நலிந்து கொண்டிருக்கும் சூழலில் இந்த ஏஐ எல்லாவற்றையும்தூக்கி சாப்பிட்டுவிடும் என்ற பயம் அனைவருக்கும் தொற்றிக் கொண்டது. இறுதியாக பார்வையாளர் களின் கருத்து கேட்கும் படலம் வந்தது. இரண்டு மூன்று பேர் பேசினர். அவர்கள் செயற்கை நுண்ணறிவை சிலாகித்து பேசி பயந்து ஒதுங்கினர். எனக்கு என்னவோ ஒரு பதிலடி தரவேண்டும் என்று தோன்றியது. நான் மைக்கை வாங்கி பேசுவதற்கு பதில் போடியம் சென்று பேச அனுமதி கேட்டேன். அதன் படி போடியம் சென்றவுடன் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கேட்டேன்

ஏஐ என்றால் என்ன ?

"செயற்கை நுண்ணறிவு"

மனிதனின் மனம் அறிவு எப்படி பட்டது ?

அது இயற்கையானது !

ஒரு செயற்கை.. இயற்கையை வெல்ல முடியுமா ?

சிலருக்கு முணுமுணுப்பு. நானே தொடர்ந்தேன்...

சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான தூரம் சுமார் 149. மில்லியன் மைல் தொலைவு.

சந்திரனுக்கும் பூமிக்கும் இடையே தூரம் சுமார் 3.5 லட்சம் மைல் தொலைவு.

விண்வெளி எல்லையற்றது. அது விரிவடைந்துகொண்டே செல்கிறது. (இந்த ஒரு வரியை நினைவில் கொள்ளுங் கள்)

இவற்றையெல்லாம் அளந்து கணித்த காலத்தில் அறிவியல் இத்தனை முன்னேற்றமடைந்திருக்கவில்லை. மனிதனின் நுண்ணறிவு அக அறிவே இதனை கணித்தது. அது எல்லையற்றது. அது முடிவில்லாதது. மனித அறிவும் பிரபஞ்சம் போன்று முடிவில்லாத ஒன்றுதான். முடிவில்லாத மனித அறிவுக்கு முன்பு எப்படி செயற்கை நுண்ணறிவு வெற்றி பெறமுடியும்?

ஆண்ட்ரூ யெஞ்சி ஹாங்காங் பூர்வீகம். லண்டனில் பிறந்து கணினி நுண்ணறிவில் உலகின் முன்னனி அறிஞர்களில் ஒருவர். ஏஐ குறித்த ஆய்வுகள் பல வெளியிட்டுள்ளார். அவரின் புகழ் பெற்ற வாசகம் இது.

"AI will not replace people, but people who use AI will replace people who don't."

அதாவது செயற்கை நுண்ணறிவு பணியாளர்களுக்கு மாற்றம் இல்லை. ஆனால் செயற்கை நுண்ணறிவு குறித்த புரிதல்கொண்டோர் அதனை அறியா தோரை மாற்றிவிடுவார்கள். என்ன குழப்பமாக இருக்கிறதா ? இப்படி புரிந்துகொள்ளுங்கள். ஏஐ மனித அறிவுக்கு மாற்றாக என்றும் இருக்காது. ஆனால் ஏஐயை எங்கு எப்படி பயன்படுத்தவேண்டும் என்ற புரிதல் இல்லையெனில் அவர்களால் இங்கு நிலைகொள்ள முடியாது.

இன்னும் சுலபமாக புரிந்துகொள்ள வேண்டுமெனில் முன்பு தாளில் எழுதிகொண்டிருந்தோம். இப்பொழுது கணினியில் எழுதுகிறோம். அப்படி தான் ஏஐ. செயற்கை நுண்ணறிவு நமக்கு கிடைத்த அலாவுதனின் அற்புத விளக்கு. அதனை எப்படி பயன்படுத்த வேண்டுமோ அப்படி பயன்படுத்தினால் பணித்திறன், கற்பனைத்திறன், உற்பத்தி திறன் எல்லாம் மிளிரும்.

சரி, ஏஐயை சினிமாவில் எப்படி பயன்படுத்தலாம்?

AI காலத்தில் திரைப்பட படைப்பாளி கள் எப்படி தங்களை நிலைநிறுத்திக் கொள்ளலாம். எளிய தலைப்புகளில் பத்து நிமிடத்தில் புரிந்துகொள்வோம் வாருங்கள்.

1. AI உங்கள் படத்தை உருவாக்கக் கூடாது; அது உதவியாளராக இருக்க வேண்டும்

ஒரு திரைப்படத்தின் ஆன்மா அதன் இயக்குநரின் பார்வை, அனுபவம், உணர்ச்சி ஆகியவற்றில் உள்ளது. AI இந்த உணர்வுகளை உண்மையாக உருவாக்க முடியாது. அது ஒரு கருவி மட்டுமே. அதனால், AIஐ முழுமையாக நம்பி படத்தை உருவாக்குவது தவறு. அதை ஒரு assistant போல பயன்படுத்தி, மனித சிந்தனையை முன்னிலைப்படுத்த வேண்டும். உதாரணமாக நீங்கள் ஒரு திரில்லர் படம் எடுக்க நினைக்கிறீர்கள். நீங்கள் உதாரணமாக பார்க்கவிரும்பும் படங்களை தேடி கண்டுபிடிக்கவே பத்து நாட்கள் ஆகும். கூகுள் உங்களுக்கு தலைப்பை தரும். ஏஐ அந்த படங்களின் சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து தீர்வு தரும். அது சரியா? தவறா? எது தேவை எது கூடாது என்பதை முடி வெடுக்கஉங்கள்சொந்தமூளையைத்தான் பயன்படுத்த வேண்டும்.

2. AI-ஐ creative replacement ஆக அல்ல, time-saving tool ஆக பயன்படுத்துங்கள்

முந்தையை உதாரணம் இதற்கும் பொருந்தும். AIஐ பயன்படுத்துவதன் முக்கிய நோக்கம் வேலை நேரத்தை குறைப்பது. Script formatting, shot listing, subtitles, basic edits போன்ற repetitive பணிகளை AI வேகமாக முடிக்க முடியும். இதனால், filmmaker தனது creative processக்கு அதிக நேரம் ஒதுக்க முடியும். அதாவது, AI உங்கள் கலைநயத்தை மாற்ற வேண்டாம்; அதை ஆதரிக்க வேண்டும்.

3. குறைந்த செலவில் உயர்ந்த தரமான visuals உருவாக்க முடியும்

Indie filmmakersக்கு பெரிய சவால் budget தான். AI tools மூலம் VFX, color grading, background enhancement போன்றவற்றை குறைந்த செலவில் உருவாக்க முடிகிறது. இதனால், பெரிய production இல்லாமல் கூட visually rich content உருவாக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இங்கு ஏஐ தாக்கம் கொஞ்சம் அதிகம். முன்பு இதுபோன்ற காட்சிகளை உருவாக்க பத்து பேர் தேவைப்படுகிறது எனில் இப்பொழுது இதனை இரண்டு பேர் அமர்ந்து செய்துவிடமுடியும். ஆனால் உண்மை அது இல்லை. உரிய துல்லியத்தன்மை கொண்டு வர ஒரே மனிதனால் முடியாது. அதே போன்று ஒரு குழு தேவை. நம்ம மக்கள் உடனே ஆட்களை நிறுத்திவிட்டு ஒரே ஆட்களின் தலையில் இந்த பணியை கட்டி நீயே செய் என்பார்கள். இது ஏஐ தவறு இல்லை. மனிதனின் சிந்தனை தவறு. ஒரு VFX காட்சி உருவாக்க கதையை உருவாக்குதல், ஸ்டோரி போர்டு முதல் இறுதி உருவாக்கம் வரை யார் யார் தேவையோ அவர்கள் அனைவரையும் பயன்படுத்த வேண்டும். ஏன் எனில் கதை உருவாக்குவது ஒரு திறமை, ஸ்டோரி போர்டு ஒரு திறமை. அந்தந்த திறமையை அதில் அனுபவம் பெற்றவர்கள் மட்டுமே சிறப்பாக சிந்திக்க முடியும். இங்கே எல்லா வேலையும் ஒரு இயந்திரம் செய்துவிடும் என்றாலும் அதன் வெளிப்பாடு இயந்திரத்தனமாக தான் இருக்கும். ஆனால் ஏஐயை வைத்து கொண்டு அந்த VFX நிறுவனம் பத்து நாட்கள் எடுத்துக்கொண்டு செய்யும் பணியை நான்கு நாட்களில் செய்து முடித்துவிடலாம். மீதி ஆறுநாட்கள் இன்னொரு பணி. அடுத்து இந்த VFX சினிமா தவிர்த்து பிற துறைகளுக்கும் கொண்டு சேர்க்க முடியும். இதனால் பணி வாய்ப்புகள் அதிகரிக்கதான் செய்யும்.

4. வேகமாக வேலை செய்வது முக்கியம் - AI அதற்கு உதவும்

முந்தையை தலைப்பின் தொடர்ச்சிதான் இது. இன்றைய content உலகில் வேகம் மிகவும் முக்கியம். Pre production முதல் postproduction வரை பல கட்டங்களில் AI உதவுகிறது. Editing, sound design, rendering போன்ற செயல்களை விரைவாக முடிக்க முடிவதால், filmmakerகள் போட்டியில் முன்னிலை வகிக்க முடியும்.

5. உணர்ச்சி மற்றும் originality மனிதரிடம்தான் இருக்கும்

AI ஒரு கதை உருவாக்கலாம், ஆனால் அது உணர்ச்சியை உண்மையாக உணர முடியாது. மனிதர்களின் அனுபவங்கள், துன்பம், மகிழ்ச்சி போன்றவை தான் ஒரு கதையை உயிர்ப்பிக்கிறது. அதனால், originality மற்றும் emotional depth எப்போதும் filmmakerரிடமே இருக்கும்.

> செயற்கை நுண்ணறிவு நமக்கு கிடைத்த அலாவுதீனின் அற்புத விளக்கு. அதனை எப்படி பயன்படுத்த வேண்டுமோ அப்படி பயன்படுத்தினால் பணித்திறன், கற்பனைத்திறன், உற்பத்தி திறன் எல்லாம் மிளிரும்.

6. AI boring வேலைகளை செய்து உதவ வேண்டும்

Filmmakingல் பல technical மற்றும் repetitive பணிகள் உள்ளன. Data organizing, file sorting, rough cuts, scheduling போன்ற boring வேலைகளை AI செய்து விடும். இதனால் filmmakerக்கு creative thinkingக்கு space கிடைக்கும். இது productivityயை அதிகரிக்கும்.

7. AI மூலம் data analyse செய்து audience-ஐ புரிந்து கொள்ளலாம்

AI tools மூலம் audience behaviour, viewing patterns, preferences ஆகியவற்றை analyse செய்ய முடியும். இது marketing மற்றும் distribution strategyஐ சரியாக அமைக்க உதவும். எந்த வகை content வேலை செய்கிறது என்பதை புரிந்து கொண்டு, அதற்கேற்ற படைப்புகளை உருவாக்கலாம்.

8. அதிகமாக AI பயன்படுத்தினால் தனித்துவம் குறையும் - balance அவசியம்

AIஐ அதிகமாக பயன்படுத்தும் போது, contentல் ஒரே மாதிரி feel வரும் அபாயம் உள்ளது. இது filmmakerன் unique voiceஐ பாதிக்கும். அதனால், AI usageக்கு ஒரு balance தேவை. Creativity மற்றும் technology இரண்டையும் சமநிலையாக பயன்படுத்த வேண்டும்.

9. AI காரணமாக எல்லோருக்கும் சம வாய்ப்பு கிடைக்கிறது

முன்பு filmmaking என்பது பெரிய resources இருந்தவர்களுக்கு மட்டுமே சாத்தியம். ஆனால் AI வந்த பிறகு, ஒரு individual creator கூட highquality content உருவாக்க முடிகிறது. இது புதிய திறமைகளுக்கு வாய்ப்பை திறக்கிறது. Industryல் equality உருவாகிறது.

10. Control எப்போதும் filmmaker கையில்தான் இருக்க வேண்டும்

AI எவ்வளவு advanced ஆனாலும், அதன் கட்டுப்பாடு மனிதரிடம் இருக்க வேண்டும். Final decision, storytelling, emotional tone, all these must be decided by the filmmaker. AI ஒரு tool மட்டுமே; அது இயக்குநரை replace செய்யக்கூடாது.

AI ஒரு அச்சுறுத்தல் அல்ல; அது ஒரு வாய்ப்பு. அதை புத்திசாலித்தனமாக பயன்படுத்தினால், Indie Filmmakers தங்கள் கனவுகளை மிக வேகமாகவும், குறைந்த செலவிலும் நனவாக்க முடியும். ஆனால், மனித உணர்ச்சி, originality, மற்றும் creative control ஆகியவை எப்போதும் முன்னிலையிலேயே இருக்க வேண்டும்.

அப்புறம் இந்த கட்டுரையை எழுத நான் ஏஐயை தான் பயன்படுத்தினேன். இதில் என் புத்தி எது? இயந்திர புத்தி எது என்பதையும் முடிந்தால் கண்டுபிடித்து rajmokanfilms@gmail.com <mailto:rajmokanfilms@gmail.com> ஒரு. மின்னஞ்சலை தட்டிவிடுங்கள். அடுத்த கட்டுரையில் சந்திப்போம்.

அமர்க்களம்: ஒரு திரைக்காவியத்தின் மீள்வருகை!

ஒரு கதாநாயகனுக்கு அவரது 25வது திரைப்படம் வெற்றிப்படமாக அமைவது சாதாரண விஷயம். ஆனால், 'காதல் மன்னனாக' வலம் வந்த ஒரு நடிகர், 'அதிரடி நாயகனாக' உருவெடுத்ததும், அதே படத்தின் மூலம் அவருக்குக் காதல் மலர்ந்து அது திருமண பந்தத்தில் முடிந்ததும் இந்திய சினிமா வரலாற்றிலேயே ஒரு அபூர்வ நிகழ்வு. இத்தனை பெருமைகளையும் ஒருங்கே கொண்ட அந்தத் திரைப்படம் 'அமர்க்களம்'. இந்த அதிசயத்தை நிகழ்த்திக்காட்டியவர் இயக்குநர் சரண்.

இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்தும் (வெளியான ஆண்டு: 1999), இன்றும் திரையரங்குகளில் மறுவெளியீடு செய்யப்பட்டு (Rerelease) வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

தமிழ் சினிமாவில் இயக்குநர் சரண் மற்றும் நடிகர் அஜித்குமார் ஆகியோரது கூட்டணி ஒரு ஆச்சரியமான ரசாயனத்தைக் கொண்டது. சரணின் அறிமுகத் திரைப்படமான 'காதல் மன்னன்' மூலம் தொடங்கிய இவர்களது பயணம் அமர்க்களம், அட்டகாசம், அசல் எனத் தொடர்ந்தது. இதில் குறிப்பிடத்தக்க ஒரு தகவல் என்னவென்றால், சரண் இயக்கத்தில் உருவான 'ஜெமினி' திரைப்படத்தில் முதலில் அஜித்



தான் நடிப்பதாக இருந்தது. சில காரணங்களால் அந்த வாய்ப்பு விக்ரமிற்குச் சென்றது. அதேபோல், 'அசல்' திரைப் படத்தில் அஜித் அவர்கள் சரணுடன் இணைந்து 'இணை இயக்குநராகப்' (Associate Director) பணியாற்றினார் என்பது பலரும் அறியாத செய்தி.

அமர்க்களம் திரைப் படத்தில் 'வாசு' என்ற முரட்டுத்தனமான கதாபாத்திரத்தில், முகத்தில் ஒருவித இறுக்கத் துடனும், ஆழமான நடிப்பாலும் அனைவரையும் மிரள வைத்தார் அஜித். இந்தப் படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடன இயக்குனராக இருந்த ராகவா லாரன்ஸ், முதன்முதலாகத் திரையில் தோன்றி அஜித்துடன் இணைந்து நடனம் ஆடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை நட்சத்திரமாகப் புகழ்பெற்ற ஷாலினி, 'காதலுக்கு மரியாதை' மூலம் கதாநாயகியாக அறிமுகமானாலும், அவருக்கு ஒரு கலகலப்பான மற்றும் அழுத்தமான பிம்பத்தை உருவாக்கியது அமர்க்களம் தான். இந்தப் படத்தில் வரும் 'சொந்தக் குரலில் பாடவா' என்ற பாடலை ஷாலினியே பாடியிருப்பார். ஷாலினி நடித்த அலைபாயுதே, பிரியாத வரம் வேண்டும் போன்ற படங்கள் பிறகு வெளியானாலும், அவர் ஒப்பந்தமாகி நடித்த கடைசித் திரைப்படம் அமர்க்களம் தான். இந்தப் படப்பிடிப்பின் போதுதான் அஜித் ஷாலினி இடையே காதல் மலர்ந்தது. 'துளசி' என்ற கதா பாத்திரத்தில் நடிகர் ரகுவரன் தனது அபாரமான நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார். அஜித்திற்கும் அவருக்குமான அந்த மோதல் மற்றும் பாசக்காட்சிகள் படத்தின் முதுகெலும்பாக அமைந்தன.

சரண் அஜித் கூட்டணியைப் போலவே, சரண் இசையமைப்பாளர் பரத்வாஜ் கூட்டணியும் சூப்பர் ஹிட்



பாடல்களைக் கொடுத்தது. கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளில், "சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்" என்ற பாடலை மறைந்த பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் அவர்கள் மூச்சு விடாமல் பாடி வியக்க வைத்தார். இன்றும் இப்பாடல்கள் இளைய தலைமுறையினரின் 'பிளேலிஸ்டில்' நீங்கா இடம் பிடித்துள்ளன. காலங்கள் கடந்தாலும் ஒரு சிறந்த படைப்பு அதன் வீரியத்தை இழக்காது என்பதற்கு 'அமர்க்களம்' ஒரு மாபெரும் சாட்சி.

எழுத்தாளர், இயக்குநர்

V.கார்த்திகுமார்



திரைமொழியின் முப்பெரும் விழா!

'திரைமொழி மாத இதழின் முப்பெரும் விழா' சிறப்புச் செய்தி;

2023 ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட 'திரைமொழி', வெறும் வணிக நோக்கம் கொண்ட இதழாக இல்லாமல், தமிழ்த் திரையுலகின் அன்றாட நிகழ்வுகளையும் சங்கங்களின் செயல்பாடுகளையும் துல்லியமாகப் பதிவு செய்து வருகிறது.

திரையுலகின் ஆவணக் காப்பகமாகவும், வளர்ந்து வரும் கலைஞர்களின் வழிகாட்டியாகவும் திகழும் 'திரைமொழி' மாத இதழ், தனது பயணத்தில் மற்றுமொரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.

சென்னையில் உள்ள டிஸ்கவரி புக் பேலஸில், 'திரைமொழி' மாத இதழின் மூன்றாம் ஆண்டு விழா, 'திரைமொழி சமூக நல அறக்கட்டளை' தொடக்க விழா மற்றும் 'பாஞ்சாலி' குறும்பட பாராட்டு விழா என முப்பெரும் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. திரைத்துறை மற்றும் இதழியல் துறையைச் சேர்ந்த ஆளுமைகள் இதில் பெருமளவில் கலந்து கொண்டனர்.


இயக்குநர் S.எழில்

ஆவணப்படுத்தப்படும் திரையுலக வரலாறு

முன்னணி இயக்குநர்கள் முதல் உதவி இயக்குநர்கள் வரை அனைவரையும் அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளைத் தாங்கி வரும் இவ்விதழ், காலத்தால் அழியாத வரலாற்று நாயகர்களான எம்.கே. ராதா, தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா, கே.பி. சுந்தராம்பாள், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போன்ற ஆளுமைகளின் வரலாற்றையும் ஆவணப்படுத்துவதைத் தன் முதன்மைக் கடமையாகக் கொண்டுள்ளது.

உலக சினிமாவின் நுழைவாயில்

தமிழ் சினிமா மட்டுமின்றி அண்டை மாநில மொழிகள் மற்றும் ஹாலிவுட் படங்கள் பற்றியும் 'திரைமொழி' தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. சர்வதேசத் திரைப்பட விழாக்களின் போக்கை உடனுக்குடன் கட்டுரைகளாக வெளியிட்டு, ரசிகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படுகிறது. குறிப்பாக, தரம்மிக்க சிறு பட்ஜெட் படங்களைக் கண்டறிந்து அந்தப் படைப்பாளர்களைக் கௌரவிப்பதில் இவ்விதழ் தனி அக்கறை காட்டி வருகிறது என்று திரை மொழி மாத இதழை தொடங்கி வைத்த இயக்குநர் S.எழில் அவர்களே திரை மொழியின் மூன்றாம் ஆண்டு முப்பெரும் விழாவில் பேசியது திரை மொழி இதழுக்கு ஒரு சான்றாக அமைந்தது.

விழாவில் இதழின் பொறுப்பாசிரியர் மூர்த்தி நடராஜன் வரவேற்புரை ஆற்றினார். இயக்குநர் எஸ். எழில் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில், இதழியல் மற்றும் திரைத் துறையில் 'திரைமொழி' இதழ் ஆற்றி வரும் ஆக்கப்பூர்வமான பங்களிப்புகள் குறித்து மூத்த பத்திரிகையாளர் இந்து தமிழ் திசை நாளிதழ் இதழியலாளர் ஆர்.சி. ஜெயந்தன் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் நலச்சங்கம் மாநிலத் தலைவர், எஸ். சரவணன், ALL INDIA SMALL NEWSPAPER ASSOCIATION TAMILNADU STATE PRESIDENT சிவயோகி மவுரியன், திரைப்பட இயக்குநர் திருமதி. ஸ்ருதி ஹரிஹர சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதழின் ஆசிரியர் மற்றும் நிறுவனர் ஆர். சுப்ரமணிய பாரதி தனது ஏற்புரையில் இதழின் எதிர்காலத் திட்டங்களைப் பகிர்ந்து கொண்டார்.

விழாவில் மூன்று ஆண்டுகளாக திரைமொழி இதழில் எழுதியவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டார்கள். டிஸ்கவரி புக் பேலஸ் நிறுவனர் M. வேடியப்பன் நன்றி கூறினார்.


இயக்குநர்
திருமதி. ஸ்ருதி ஹரிஹர சுப்பிரமணியம்


ஆர்.சி.ஜெயந்தன்


எஸ்.சரவணன்


சிவயோகி மவுரியன்


வேடியப்பன்


மூர்த்தி நடராஜன்



திரைமொழி சமூக நல அறக்கட்டளை: மனிதம் வளர்ப்போம்


இயக்குநர் ஆர்.கே.செல்வமணி

சங்கம்), **பேராசிரியர் டாக்டர் எஸ். சேகர்** (பொதுச்செயலாளர், உலகச் சமுதாய சேவா சங்கம்), **அருள்நிதி பி. முருகானந்தம்** (CEO, ஆழியாறு அறிவுத்திருக்கோயில்), **நடிகர் ஜீவா தங்கவேல்** மற்றும் **பேராசிரியர் அருள்நிதி மாலதி சுப்பிரமணியம்** ஆகியோர் வாழ்த்தி வெளியிட, அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் **ஆர். சுப்ரமணிய பாரதி,** பொதுச்செயலாளர் **டாக்டர் அருள்நிதி கே. குரு அரங்கதுரை** மற்றும் பொருளாளர் **மூர்த்தி நடராஜன்** ஆகியோர் இலச்சினையைப் பெற்றுக் கொண்டனர்.

இயக்குநர் ஆர்.கே. செல்வமணி அவர்கள் **"மனிதம் வளர்ப்போம்"** என்ற அறக்கட்டளையின் தாரக மந்திரத்தை முன்மொழிய, அரங்கம் முழுவதும் மனிதாபிமான முழக்கம் எதிரொலித்தது.

"திரைத்துறையினரின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் திரை மொழி சமூக நல அறக்கட்டளைக்கு எப்போதும் துணையாக இருப்பேன்" என்று இயக்குநர் R.V. உதயகுமார் பேசினார்.

ஆரோக்கியமான அன்பும், அறமும் சார்ந்த சமூகத்தை வளர்த்தெடுக்கவே அனைவருக்கும் எளிய முறை உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி மற்றும் காயகல்ப பயிற்சிகள் கொடுக்கவே இந்த அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டதின் முக்கிய நோக்கம் என்று அதன் நிறுவனத்தலைவர் ஆர்.சுப்ரமணிய பாரதி கூறினார்.

'திரை மொழி சமூக நல அறக்கட்டளை' யின் மனிதம் வளர்ப்போம் விருதினை சிறப்பாக சமூக சேவை செய்து வரும் கற்பக விருட்சம் அறக்கட்டளை நிறுவனர் சத்திய நாராயணன் அவர்களுக்கும், முதல் தலைமுறை அறக்கட்டளை நிறுவனர் எ. மாரிசாமி அவர்களுக்கும் வழங்கப்பட்டது.


இயக்குநர் ஆர்.வி. உதயகுமார்

விழாவில் இசையமைப்பாளர்கள் **இசைக்கவிஞர் சௌந்தர்யன், S.J. ஜனனி,** திரைப்பட நடிகர் **ஜீவா தங்கவேல்,** இணை இயக்குநர், நியூஸ் 7 ஊடகவியலாளர் **கரு. ராதாகிருஷ்ணன்,** Speech Therapist, செய்தி வாசல் மாத இதழ் நிறுவனர் **S. தனசேகரன்,** திரைப்பட இயக்குநர் **சு. சத்தியசீலன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சமூக செயற்பாட்டாளர் ஆடிட்டர் **சு. ஐஸ்வர்யா** நன்றியுரை கூறினார்.

'திரை மொழி மாத இதழ்' வெற்றிகரமாக மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில், **'திரைமொழி சமூக நல அறக்கட்டளை'** தொடங்கப்பட்டுள்ளது.

அறக்கட்டளையின் லோகோ வெளியீடு

இவ்விழாவில், அறக்கட்டளையின் இலச்சினையை (Logo) **இயக்குநர் ஆர்.கே.செல்வமணி** (தலைவர், FEFSI & திரைப்பட இயக்குநர்கள் சங்கம்), **இயக்குநர் ஆர்.வி. உதயகுமார்** (பொதுச் செயலாளர், திரைப்பட இயக்குநர்கள்


சத்திய நாராயணன்


எ. மாரிசாமி


ஆர். சுப்ரமணிய பாரதி


அருள்நிதி
கே. குரு அரங்கதுரை


S.J. ஜனனி


சௌந்தர்யன்


கரு. ராதாகிருஷ்ணன்


சு. ஐஸ்வர்யா

பராபவ புத்தாண்டு

ஆதியின் ஊற்றை
அறிந்துரைத் தவரில்லை
அகத்தியன் உரைத்த
தமிழிலும் தவறில்லை

உணர்வில் தமிழன்
என்றொரு மமதை
உணரும் தருணம்
உயிர்பெறும் மயிர்க்கால்

இறவா மொழியது
இறையின் மொழியிது
முறையென அறிநெறி
அறியுரைப் பொழியுது

அறமும் மறமும்
அறுபடா திறனை
உரமிகு கூற்றினால்
தமிழ்மொழி கூறுது

தஞ்சம் புகுவது
எதிரி என்றாலும்
வஞ்சம் கொள்ளாது
அடைக்கலம் கொடுக்கும்

நெஞ்சம் கொண்டவன்
அஞ்சா தமிழன்
அவன்வழி தொடரும்
அறமிகு தமிழோர்

எத்தனை இனத்திற்கும்
மங்காத ஒளியாய்
அத்தனை மனதிற்கும்
நீங்காத வளியாய்

ஏற்றம் பெறும்
நல்வாழ்வு வருமே
மாற்றம் கூறும்
பெருவாழ்வு தருமே

ஊக்கம் உறைந்த
உற்சாக பேராண்டு
ஆக்கம் நிறைந்த
பராபவ புத்தாண்டு



கவிஞர் ஜெ. பார்வதி
கணித பட்தாரி ஆசிரியை
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கீழ்முட்டுக்கூர், கீ.வ.குப்பம் ஒன்றியம்
வேலூர் மாவட்டம்.



SITADAU நடத்திய கிரிக்கெட் போட்டி

South Indian Television Artist and dubbing artist Union (SITADAU), திரைப்படத் துறையில் உள்ள 23 சங்கங்களில், டத்தோ திரு ராதாரவி அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக செயல்படும் ஒரு சங்கமாகும், அதன் பொதுச்செயலாளராக திரு. *TNB* கதிரவன் அவர்களும், பொருளாளராகதிருமதி சாஜிதா அவர்களும் சிறப்பாக செயல்படுகிறார்கள், பல நடிகர்களின் நடிப்பு திறமைக்கு தங்களின் குரல் திறமையால் உயிர் கொடுக்கும் டப்பிங் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஒவ்வொரு வருடமும் *"DPL "டப்பிங் பிரிமியர் லீகு என்ற பெயரில் ஒரு கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை SITADAU சங்கம் 2022 ஆண்டு முதல் நடத்தி வருகிறது*. கடந்த 2/4/2026 முதல் 5/4/2026 வரை கோவூரில் உள்ள' *Ten Sports Ground*' விளையாட்டு மைதானத்தில்" DPL" போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது, மூன்று நாட்களும் இந்த விளையாட்டுப் போட்டியை அனைவரும் கண்டு களிக்கும் விதமாக பிரத்யோகமாக யூடியூப் சேனலில் சிறந்த வர்ணனையுடன் ஒளிபரப்பு செய்து சிறப்பித்தனர். இந்த போட்டியில் **வலிமை அணி, அவெஞ்சர்ஸ் அணி, கோலிவுட் அணி, ஸ்டார் வாய்ஸ் அணி, லியோ அணி.** என ஐந்து அணிகள் போட்டியிட்டு சிறப்பாக விளையாடினர், மூன்று நாட்கள் போட்டியையும் அதன் தலைவர் திரு. டத்தோ ராதாரவி அவர்களும் மற்றும் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களுடன் " *SITADAU* " சங்க உறுப்பினர்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர், மூன்றாவது நாள் "இறுதிச்சுற்றுப் போட்டி" நடைபெற்றபோது, சிறப்பு விருந்தினர்களாக தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத் தலைவர் இயக்குநர் ஆர்.கே.செல்வமணி, பொதுச் செயலாளர் சுவாமிநாதன், பொருளாளர் செந்தில்குமார், திரைப்பட இயக்குநர்கள் சங்க பொதுச்செயலாளர் இயக்குநர் ஆர். வி.உதயகுமார், பொருளாளர் இயக்குநர் பேரரசு, இசையமைப்பாளர் கலைமாமணி தீனா, ஒளிப்பதிவாளர்கள் சங்கச் செயலாளர் நடிகர். இளவரசு, நடன கலைஞர்கள் சங்கத் தலைவர் தினேஷ் மாஸ்டர் ஆகியோர்கள் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர்.

போட்டியில் முதல் பரிசினை வலிமை அணியும், இரண்டாவது பரிசினை ஸ்டார் வாய்ஸ் அணியும், மூன்றாவது பரிசினை லியோ அணியும், நான்கு ஐந்தாவது பரிசுகளை அடுத்த இரண்டு அணிகளும் பெற்றது. நிகழ்ச்சியின் நிறைவாக அனைவரையும் வாழ்த்தி பேசிய சம்மேளனத் தலைவர் திரு. ஆர். கே. செல்வமணி, *SITADAU* மிகவும் சிறப்பாக செயல்படுவதாக பாராட்டியதுடன், தமிழ்நாடு இயக்குநர்கள் சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்தி கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதனை இயக்குநர்கள் சங்க பொதுச்செயலாளர் ஆர். வி. உதயகுமார் ஏற்றுக் கொண்டார். இதன் தொடர்ச்சியாக நடன கலைஞர்கள் சங்கத்திலும் இப்படி விளையாட்டுப்போட்டி நடத்தப்படும் என்று தினேஷ் மாஸ்டர் அறிவித்தார்கள், நான்கு சுவர்களுக்குள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் டப்பிங் கலைஞர்களின் விளையாட்டுத் திறமையை திறந்த வெளி அரங்கில் அனைவரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்தி, ஊக்கப்படுத்திய சிறந்த நிகழ்ச்சியாக இந்த "DPL " போட்டி அமைந்துள்ளது என்று கருத்து தெரிவித்த இந்த நிகழ்ச்சியின் ஸ்பான்சர்களில் ஒருவரான லயன் N.அழகிரிசாமி, டிபிஎல் போட்டியை மிகவும் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்திய N.சதீஷ்குமார், K. கார்த்திகேயன் ஆகியோர்களையும் பாராட்டினார்கள். "கலையும் விளையாட்டும் சமுதாயத்தின் இரு கண்கள் கலை நம் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி"



எழுத்தாளர், இயக்குநர் **வி. பிரபாகர்.**
செயற்குழு உறுப்பினர், *SITADAU*.

திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு அரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
Website: Thiraimozhi.com
Email : info@thiraimozhi.com
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

பக்கம் 1 தொடர்ச்சி

படத்திற்கு U/A சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் செய்யப்பட்டதுடன், இறுதி நேரத்தில் படம் மறுபரிசீலனைக் குழுவிற்கு (Revising Committee) மாற்றப்பட்டது. இதனை எதிர்த்துத் தயாரிப்பு நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு (Writ Petition) ஒன்றைத் தாக்கல் செய்து, 24 மணி நேரத்திற்குள் சான்றிதழ் வழங்கக் கோரியது. இந்த நீண்ட சட்டப் போராட்டமும், வெளியீட்டுத் தாமதமுமே திரைப்படத்தின் டிஜிட்டல் பிரதிகள் பல கைகளுக்கு மாறுவதற்கும், அதன் மூலம் பாதுகாப்பு வளையங்கள் பலவீனமடைந்து படம் இணையத்தில் கசிவதற்கும் ஒரு மறைமுகக் காரணியாக அமைந்தது.



இணையக் கசிவின் காலவரிசையும் சைபர் குற்றவியல் விசாரணையும்

ஏப்ரல் 9, 2026 அன்று, திரைப்படத்தின் முகப்புப் பெயர்கள் மற்றும் நாயகன் விஜய்யின் அறிமுகக் காட்சி அடங்கிய 5 நிமிடக் காட்சிகள் முதலில் இணையத்தில் கசிந்தன. சில மணிநேரங்களில் மூன்று மணிநேர முழுத் திரைப்படமும் பல்வேறு இணைய தளங்களிலும், கிளவுட் தளங்களிலும் சட்டவிரோதமாகப் பதிவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து கே.வி.என் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தின் தயாரிப்புக் கட்டுப்பாட்டாளர் ஆர். உதயகுமார் தமிழ்நாடு காவல்துறையின் சைபர் கிரைம் (Cyber Crime Wing) பிரிவில் அவசரப் புகார் ஒன்றைப் பதிவு செய்தார்.

இந்த விசாரணையின் விளைவாக, ஏப்ரல் 14ஆம் தேதியன்று கோயம்புத்தூரைச் சேர்ந்த கேபிள் டிவி ஆபரேட்டர் ஒருவர், கசிந்த திரைப்படத்தைத் தனது தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து ஏப்ரல் 16ஆம் தேதி ஒரு ஃப்ரீலான்ஸ் எடிட்டர் உட்பட மொத்தம் ஆறு நபர்களைத் சைபர் கிரைம் போலீஸார் கைது செய்தனர். இணையத்தில் கசிந்த திரைப்படப் பிரதியில் காணப்பட்ட "edit_red14012026" என்ற எடிட்டிங்துறை சார்ந்த வாட்டர்மார்க் (Watermark) காவல் துறையினருக்கு மிக முக்கியத் தடயமாக அமைந்தது. இது வெளிப்புற ஹேக்கர்களால் செய்யப்பட்ட திருட்டு அல்ல, உள்நபரால் (Insider job) செய்யப்பட்ட செயல் என்பதை சைபர் சட்ட வல்லுநர்கள் உறுதிப்படுத்தினர்.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் (TANTIS) மற்றும் பிற அமைப்புகளின் அறிக்கைகள்

இக்கட்டான இந்தச் சூழலில், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் (TANTIS) ஓர் அதிகாரப்பூர்வப் பத்திரிகைச் செய்தியை வெளியிட்டு படக்குழுவினருக்குத் தனது முழு ஆதரவைத் தெரிவித்தது. தலைவர் ஆர். கே. செல்வமணி, பொதுச்செயலாளர் ஆர்.வி. உதயகுமார் மற்றும் பொருளாளர் பேரரசு ஆகியோர் கூட்டாகக் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில், தங்கள் சங்கத்தின் உறுப்பினர் எச். வினோத்தின் இயக்கத்தில் உருவான திரைப்படம் இணையத்தில் கசிந்தது குறித்து மிகுந்த மனவேதனையைத் தெரிவித்தனர். பல கோடி ரூபாய் தயாரிப்பிலும், நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் உழைப்பிலும் உருவான இப்படத்தை இணையத்தில் கசியவிட்ட விஷமிகளின் செயலை வன்மையாகக் கண்டித்த சங்கம், பொதுமக்கள்யாரும் இத்திரைப்படத்தைப் பகிரவோ, பதிவிறக்கம் செய்யவோ, பார்க்கவோ வேண்டாம் என்று கேட்டுக் கொண்டது. மேலும், மத்திய மாநில அரசுகள் இந்தத் திருட்டைத் தடுத்து நிறுத்தி, குற்றவாளிகளைக் கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

சர்வதேச அளவிலும் கண்டனங்கள் எழுந்தன. மலேசிய விநியோகஸ்தரான மாலிக் ஸ்ட்ரீம்ஸ் (Malik Streams) வெளியிட்ட அறிக்கையில், "கசிந்த காட்சிகளைப் பார்ப்பதும் பகிர்வதும் திருட்டுக்குச் சமம்; இதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை" என்று வலியுறுத்தியது.

தயாரிப்பாளர்கள் மற்றும் திரைக்கலைஞர்களின் பொருளாதார மற்றும் உளவியல் பாதிப்புகள்

ரூபாய் 500 கோடி முதலீடு செய்யப்பட்ட ஒரு திரைப்படத்தின் கசிவு, அப்படத்தின் தயாரிப்பாளர்களுக்கு மிகப்பெரிய பொருளாதாரப் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளது. கே.வி.என் புரொடக்ஷன்ஸ் நிறுவனம், சட்ட விரோதப் பகிர்வுகளுக்கு எதிராகக் காப்புரிமை மீறல் வழக்குகளைத் (Copyright lawsuit) தொடர்ந்துள்ளது.

பொருளாதார இழப்புகளைத் தாண்டி, படைப்பாளிகளின் மீது இது ஆழமான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. திரைப்படத்தின் இயக்குநர் எச். வினோத், ஆயிரக்கணக்கான கலைஞர்களின் உழைப்பும், கனவுகளும் வீணாவதைத் தடுக்க, கசிந்த காட்சிகளைப் பகிர வேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார். நடிகை மமிதா பைஜு, இச்செய்தியைக் கேள்விப்பட்டவுடன் தான் அடைந்த அதிர்ச்சியையும் வேதனையையும் ஊடகங்களில் பகிர்ந்துகொண்டார். பல மாதக் கடின உழைப்பு இவ்வாறு வீணாவதைப் பார்க்க மிகவும் வலி தருவதாக அவர் தெரிவித்தார்.

தென்னிந்தியத் திரைநட்சத்திரங்களின் ஒருங்கிணைந்த கண்டனக் குரல்கள்

இந்தச் சம்பவம் குறித்துத் திரையுலக முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் தங்களது கண்டனங்களை ஒருமித்துத் தெரிவித்தனர்.

- **ரஜினிகாந்த்:** இந்தச் சம்பவம் தனக்கு ஆழ்ந்த அதிர்ச்சியளிப்பதாகவும், குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
- **கமல்ஹாசன்:** தணிக்கைக் குழுவின் தாமதத்தால் ஏற்பட்ட 'அமைப்பியல் தோல்வி'யே (Systemic Failure) இதுபோன்ற திருட்டுச் செயல்களுக்கு வழிவகுக்கிறது என்று விமர்சித்தார்.
- **சூர்யா:** இது உழைப்பிற்கு நேர்ந்த அநீதி என்றும், ரசிகர்கள் கசிந்த காட்சிகளை எக்காரணம் கொண்டும் பகிரக்கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தார்.
- **ஜீவா:** திருட்டை ஆதரிப்பவர்கள் உண்மையான ரசிகர்கள் அல்ல, அவர்கள் குற்றத்தின் ஒரு பகுதி என்று சாடினார்.
- தெலுங்குத் திரையுலகைச் சேர்ந்த **சிரஞ்சீவி, விஜய் தேவரகொண்டா** மற்றும் நடிகர் **மாதவன்** ஆகியோரும் படக்குழுவினருக்குத் தங்களின் முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர்.

தொழிலாளர் சங்கங்களுக்கு இடையிலான முரண்பாடுகளும் ஒழுங்கு நடவடிக்கைகளும்

இந்த விவகாரத்தைத் தொடர்ந்து, தென்னிந்தியத் திரைப்படத் தொகுப்பாளர்கள் சங்கம் (SIFEA) ஏப்ரல் 17, 2026 அன்று 'ஜனநாயகன்' படத்தின் முதன்மை எடிட்டரான பிரதீப் ஈ. ராகவ் என்பவரைச் சங்கத்திலிருந்து தற்காலிகமாக நீக்கியது. அவர் சங்கத்தின் அதிகாரப்பூர்வ உறுப்பினர் அல்லாத வெளியாட்களை உதவியாளர்களாகப் பயன்படுத்தியதன் மூலமும், தொழில்நுட்பப் பணிகளில் அவரது கவனக்குறைவுமே கசிவுக்குக் காரணம் என்பதை அவர் ஒப்புக் கொண்டதாகச் சங்கம் அறிக்கை வெளியிட்டது.

இருப்பினும், எடிட்டர்கள் யூனியன் (Editors' Union) இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தது. கசிந்த பிரதியில் 'edit_red14012026' என்ற வாட்டர்மார்க் அழிக்கப்படாமல் இருப்பதே, எடிட்டர் நேரடியாக இக்குற்றத்தில் ஈடுபடவில்லை என்பதற்கான முக்கிய ஆதாரம் என்று யூனியன் வாதிட்டது. இது திரைப்படத் துறையில் போஸ்ட்புரொடக்ஷன் பணிகளில் உள்ள தரவுப் பாதுகாப்பு (Data Security) குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

திரைப்படக் கசிவின் தொழில்நுட்பப் பரிமாணங்களும் எதிர்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகளும்

'ஜனநாயகன்' திரைப்படக் கசிவு, சினிமா தொழில்நுட்ப உலகில் நிலவும் கடுமையான பலவீனங்களை உணர்த்தியுள்ளது. ஒட்டுமொத்தப் படமும் உயர் தரத்தில் கசிந்துள்ளமையானது, திரைப்படங்கள் போஸ்ட்புரொடக்ஷன் மற்றும் தணிக்கைக்குச் செல்லும் போது முறையான குறியாக்கப் பாதுகாப்பின்றி (EndtoEnd Encryption) கையாளப்படுவதையே காட்டுகிறது.

எதிர்காலத்தில் இத்தகைய கசிவுகளைத் தவிர்க்க, இணைய இணைப்பை முற்றிலுமாகத் துண்டித்து எடிட்டிங் செய்தல் (Airgapping), ஒவ்வொரு தொழில்நுட்பக் கலைஞருக்கும் தனித்தனி வாட்டர்மார்க்குகளை உருவாக்குதல் (Forensic Watermarking), மற்றும் தரவுகளைப் பகிர்வதற்கு ராணுவத் தரத்திலான குறியாக்கத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை கட்டாயமாகக் கப்பட வேண்டும்.

'ஜனநாயகன்' திரைப்படக் கசிவு விவகாரம் இந்தியத் திரைப்படத் துறையின் ஆழமான தொழில்நுட்பப் பாதுகாப்பின்மை மற்றும் நிர்வாக ரீதியான அமைப்பியல் குறைபாடுகளின் தீவிரமான வெளிப்பாடாகும். எதிர்காலத்தில் இத்தகைய கலாச்சார மற்றும் பொருளாதாரப் பேரிழப்புகளைத் தவிர்க்க, தயாரிப்பு நிறுவனங்கள் தங்களின் டிஜிட்டல் பாதுகாப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும். அத்துடன், மத்திய அரசு தனது தணிக்கை நடைமுறைகளை விரைவாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ளத் தேவையான நவீன தொழில்நுட்பங்களை அமல்படுத்த வேண்டும். திருட்டுத்தனத்தை ஆதரிக்கும் மனப்பான்மையைப் பொதுமக்களிடம் இருந்து அகற்றுவதற்குத் தொடர் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களும் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் அவசியமாகும்.

THIRAI MOZHI TAMIL MONTHLY PRESS REGISTRAR GENERAL OF INDIA
PRGI (RNI) No: TNTAM/2023/88599 Published on 2nd WEEK OF EVERY MONTH
April - 2026



'பாஞ்சாலி' குறும்படத் திரையிடலும் பாராட்டும்



'திரைமொழி மாத இதழின் முப்பெரும் விழாவில் மூன்றாவது நிகழ்வாக பாஞ்சாலி குறும்படம் திரையிடப்பட்டது.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கமும் இன்னோவேட்டிவ் பிலிம் அகாடமியும் இணைந்து கடந்த 2022ம் ஆண்டில் நடத்திய தேசிய அளவிலான குறும்படப் போட்டியில் சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது 'பாஞ்சாலி' குறும்படம். இதை இயக்கியவர் திரைமொழி பத்திரிகையின் ஆசிரியரும், திரைமொழி சமூக நல அறக்கட்டளை நிறுவனத்தலைவருமான ஆர். சுப்ரமணிய பாரதி ஆவார்.

செய்தித்துறை மத்திய இணை அமைச்சர் உயர்திரு எல்.முருகன் அவர்களால் ஏற்கனவே விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இப்படம் இவ்விழாவில் திரையிடப்பட்டு அனைவராலும் பாராட்டப்பட்டது.

"இது குறும்படம் என்று சொல்ல முடியாத அளவிற்கு பெரும் படத்திற்கு இணையான படைப்பு. இயக்குநர் சுப்ரமணிய பாரதி ஒரு சிறந்த கதையை மிக நேர்த்தியான திரைக்கதை உத்தியால் உயிரோட்டமாக இயக்கியுள்ளார் என்று. த.ஸ்டாலின் குணசேகரன் (தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை) பாராட்டினார்.

இயக்குநர் ராசி அழகப்பன் பேசுகையில், "சுப்ரமணிய பாரதியின் இயக்கம் சத்யஜித் ரேவின் தரத்திற்கு நிகராக உள்ளது" என பெருமிதத்தோடு பாராட்டினார். இதில் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் விழாவில் சிறப்பிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் பாஞ்சாலி: இசையமைப்பாளர் அமர்கீத் வரவேற்புரை வழங்க, த. ஸ்டாலின் குணசேகரன் சிறப்புரையாற்றினார். இயக்குனர் ராசி அழகப்பன் தயாரிப்பாளர் ஜீவானந்தம், இயக்குநர் பிருந்தாசாரதி, மக்கள் குரல் ஆசிரியர், நிறுவனர் ராம்ஜி, எழுத்தாளர் என்.கலையரசன், நடிகர் புரோட்டா முருகேசன் ஆழியாறு அறிவுத்திருக் கோயில், மக்கள் தொடர்பு அலுவலர் அருள்நிதி. T.N. வேதகுமரச் செல்வன் ஆகியோர் படக்குழுவினரைப் பாராட்டிப் பேசினர்.

ஒளிப்பதிவாளர் கோகுல், மேனேஜர் நிஜாம் அலி, நடிகை ஜெயந்தி



தியாகராஜன், நடிகை ஸ்ரீபிரியா, மற்றும் திரையுலக பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

சமூக செயற்பாட்டாளர் அருள்நிதி உமாராணி நன்றியுரை வழங்கினார்.















Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**